Singapore Examinations and Assessment Board

# Singapore–Cambridge General Certificate of Education Ordinary Level (2026)

# Tamil

# தமிழ்

# (Syllabus 1157)

© MOE 2026

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| தமிழ்மொழி கற்றல் கற்பித்தலுக்குரிய பாடத்திட்ட நோக்கங்கள் | 3 |
| மதிப்பீட்டு நோக்கங்கள் | 4 |
| தேர்வு அமைப்புமுறை | 5 |
| தேர்வு விவர அட்டவணை | 8 |
| மரபுத்தொடர்கள் மற்றும் இணைமொழிகள் பட்டியல் | 10 |
| பிழை திருத்தம் - தேர்வில் சோதிக்கப்படவிருக்கும் இலக்கணக்கூறுகள் | 12 |
| நடைமுறை சார்ந்த எழுத்துப் படைப்பு மதிப்பீட்டுத் திட்டம் | 13 |
| கட்டுரை மதிப்பீட்டுத் திட்டம் | 15 |
| வாய்மொழி மதிப்பீட்டுத் திட்டம் | 17 |

# 1 தமிழ்மொழி கற்றல் கற்பித்தலுக்குரிய பாடத்திட்ட நோக்கங்கள்

கல்வி அமைச்சின் பாடக்கலைத்திட்ட வரைவு, மேம்பாட்டுப் பிரிவினால் உருவாக்கப்பட்ட உயர்நிலை வகுப்புகளுக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய நான்கு அடிப்படை மொழித்திறன்களோடு இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களிலும் மாணவர்களுக்குப் பயிற்சியளித்தலாகும். இவற்றோடு தமிழ் மரபுக் கூறுகளையும் பண்பாட்டுக் கூறுகளையும் மாணவர்களுக்கு நன்கு விளக்குவதோடு நாட்டுருவாக்கத்துக்குத் தேவையான பண்புநலன்களையும் அவர்களிடத்தில் வளர்த்தலாகும். எனவே, உயர்நிலை வகுப்புகளுக்குரிய தமிழ்மொழிப் பாடத்திட்டம் பின்வரும் கற்றல் அடைவுநிலைகளை அடிப்படையாகக்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது:

### 1.1 கேட்டலும் நோக்கலும்

- மாணவர்கள் பல்வகையான கேட்டல் நோக்கல் வளங்களைக் கேட்டும் பார்த்தும் தக்க வகையில் புரிந்துணர்வை வெளிப்படுத்துவர்

### 1.2 பேசுதல்

- மாணவர்கள் பல்வேறு சூழல்களுக்கேற்பப் பேச்சுத்தமிழிலும் எழுத்துத்தமிழிலும் தெளிவாகவும் சரளமாகவும் பேசுவர்

### 1.3 பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம்

- மாணவர்கள் சூழலுக்குத் தக்கவாறு பொருத்தமான முறையில் பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபடுவர்

### 1.4 படித்தலும் நோக்கலும்

- மாணவர்கள் பல்வகையான பனுவல்களைப் பார்த்தும் படித்தும் தக்க வகையில் புரிந்துணர்வை வெளிப்படுத்துவர்

### 1.5 எழுதுதல்

- மாணவர்கள் சரியான மொழியமைப்புடனும் படைப்பாக்கத் திறனுடனும் தங்கள் கருத்துகளைப் பல்வேறு வடிவங்களில் வெளிப்படுத்துவர்

### 1.6 எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம்

- மாணவர்கள் சூழலுக்கேற்பப் பொருத்தமான மொழியமைப்பையும் வடிவத்தையும் பயன்படுத்தி எழுத்துவழியே கருத்துப்பரிமாறிக்கொள்வர்

# 2 மதிப்பீட்டு நோக்கங்கள்

உயர்நிலை வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் கற்றல், கற்பித்தலின் வாயிலாகப் பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றல் அடைவுநிலைகளை அடைவதற்குரிய திறன்களைப் பெற்றிருப்பர். இத்திறன்களைச் சோதிப்பதே மதிப்பீட்டின் நோக்கங்கள் ஆகும். கற்றல் அடைவுநிலைகளை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்ட மதிப்பீட்டு நோக்கங்கள் பின்வருமாறு:

### 2.1 கேட்டல்

- எழுத்து, பேச்சு வடிவில் அமைந்த பலவகையான பனுவல்களைக் கேட்டுத் தமது புரிந்துணர்வை வெளிப்படுத்துதல்

### 2.2 பேசுதல்

- கொடுக்கப்படும் தலைப்புக்கு ஏற்ற கருத்துகளைப் பொருத்தமான சான்றுகளுடன் தொடர்ச்சியாகவும் நிரல்படவும் எடுத்துரைத்தல்
- செவிமடுப்போர் புரிந்துகொள்ளுமாறு கருத்துகளைச் தெளிவாகவும் சரளமாகவும் கூறுதல்; பொருத்தமான சொல்வளமும் தொடரமைப்பும் கொண்ட மொழிநடையைப் பயன்படுத்துதல்; பேச்சுத்தமிழிலோ எழுத்துத்தமிழிலோ சரியான உச்சரிப்புடனும் பொருத்தமான தொனியுடனும் பேசுதல்

### 2.3 பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம்

- கொடுக்கப்படும் தலைப்பையொட்டி ஈடுபாட்டுடன் உரையாடுவதோடு செவிமடுப்போர் புரிந்துகொள்ளுமாறு கருத்துகளைத் தெளிவாகவும் சரளமாகவும் எடுத்துரைத்தல்
- பொருத்தமான சொல்வளமும் தொடரமைப்பும் கொண்ட மொழிநடையைப் பயன்படுத்துதல்; பேச்சுத்தமிழிலோ எழுத்துத்தமிழிலோ சரியான உச்சரிப்புடனும் பொருத்தமான தொனியுடனும் கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபடுதல்

### 2.4 படித்தல்

- பலவகையான பனுவல்களை ஆழ்ந்து படித்துத் தம் புரிந்துணர்வை வெளிப்படுத்துதல்

### 2.5 எழுதுதல்

- கொடுக்கப்படும் கட்டுரைத் தலைப்புகளுக்கு ஏற்ற கருத்துகளைத் தெளிவாகவும் விரிவாகவும் பொருத்தமான எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்தியும் கருத்து வளர்ச்சியுடன் எழுதுதல்
- சிறந்த மொழிநடையில் பொருத்தமான, பலதரப்பட்ட சொல்வளத்தையும் வாக்கிய வகைகளையும் பயன்படுத்திக் கருத்துகளை நிரல்பட அமைந்த கருத்துத் தொடர்ச்சியுடன் எழுதுதல்

### 2.6 எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம்

- கொடுக்கப்படும் மின்னஞ்சல் தலைப்புகளுக்கு ஏற்ற கருத்துகளைத் தெளிவாகவும் விரிவாகவும் கருத்து வளர்ச்சியுடன் எழுதுதல்
- இலக்கணத்தையும் மொழியமைப்பையும் பொருத்தமுறப் பயன்படுத்திக் கருத்துகளை நிரல்பட அமைந்த கருத்துத் தொடர்ச்சியுடன் எழுதுதல்

# 3 தேர்வு அமைப்புமுறை

சாதாரணநிலைத் தமிழ்த் தேர்வு மொத்தம் மூன்று வினாத்தாள்களைக் கொண்டது.

## வினாத்தாள் 1: கட்டுரை

**(2 மணி, 60 மதிப்பெண்கள், 30%)**

இத்தாள் 'அ', 'ஆ' என்னும் இரு பிரிவுகளை உள்ளடக்கியது. இவ்விரு பிரிவுகளிலும் உள்ள வினாக்களுக்கு விடையளிக்க அங்கீகரிக்கப்பட்ட தமிழ் அகராதிகளுள் ஒன்றினைப் பயன்படுத்தலாம்.

**'அ' பிரிவு: நடைமுறை சார்ந்த எழுத்துப்படைப்பு – மின்னஞ்சல்**

இப்பிரிவில் உறவுமுறை சார்ந்த மின்னஞ்சல், அலுவல் சார்ந்த மின்னஞ்சல் ஆகிய வடிவங்களில் அமைந்த இரண்டு வினாக்கள் கொடுக்கப்படும். அவற்றுள் ஏதேனும் ஒன்றினைப்பற்றி 110 சொற்களுக்குக் குறையாமல் விடையளித்தல் வேண்டும். பொருள், மொழி, அமைப்புமுறை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு தேர்வெழுதுபவரின் படைப்பு மதிப்பிடப்படும்.

**'ஆ' பிரிவு: கட்டுரை**

இப்பிரிவில் மூன்று கட்டுரைத் தலைப்புகள் இடம்பெற்றிருக்கும். அவற்றுள் ஏதேனும் ஒன்றினைப்பற்றி 200 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை/கதை எழுதுதல் வேண்டும். பொருள், மொழி, அமைப்புமுறை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு தேர்வெழுதுபவரின் படைப்பு மதிப்பிடப்படும்.

## வினாத்தாள் 2: மொழி மரபும் பயன்பாடும் மற்றும் கருத்தறிதல்

**(1 மணி 30 நிமிடங்கள், 70 மதிப்பெண்கள், 35%)**

இத்தாள் 'அ', 'ஆ', 'இ' ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியது.

**'அ' பிரிவு: மொழி மரபும் பயன்பாடும்**

இப்பிரிவில் 'மரபுத்தொடர்களும் இணைமொழிகளும்', 'முன்னுணர்வுக் கருத்தறிதல்' ஆகிய தலைப்புகளில் வினாக்கள் இடம்பெறும். 'மரபுத்தொடர்களும் இணைமொழிகளும்' எனும் தலைப்பின்கீழ் ஐந்து வினாக்கள் இடம்பெறும். அவை பாடத்திட்டத்தில் இடம்பெற்றுள்ள 80 மரபுத்தொடர்களையும் 48 இணைமொழிகளையும் அடிப்படையாகக்கொண்டு அமைந்திருக்கும். கொடுக்கப்படும் பத்து உதவிச்சொற்களிலிருந்து கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான மரபுத்தொடர்களையும் இணைமொழிகளையும் தேர்ந்தெடுக்கவேண்டும். 'முன்னுணர்வுக் கருத்தறிதல்' (சொல்லளவு: 90-100) எனும் தலைப்பின்கீழ் ஒரு பனுவலை அடிப்படையாகக்கொண்டு ஐந்து கோடிட்ட இடங்கள் இடம்பெறும். கொடுக்கப்படும் பத்து உதவிச்சொற்களிலிருந்து மிகப் பொருத்தமான விடைகளைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

**'ஆ' பிரிவு: தெரிவுவிடைக் கருத்தறிதல் மற்றும் பிழை திருத்தம்**

இப்பிரிவில் இடம்பெறும் இரண்டு பனுவல்களையொட்டி (சொல்லளவு: 235-245) ஐந்து தெரிவுவிடை வினாக்கள் இடம்பெறும். ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்படும் நான்கு தெரிவுகளுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவேண்டும். 'பிழை திருத்தம்' எனும் தலைப்பின்கீழ்ப் பாடத்திட்டத்திலுள்ள இலக்கணக் கூறுகளைச் சோதிக்கும் வகையில் ஒரு பனுவலை (சொல்லளவு: 80-90) அடிப்படையாகக்கொண்டு ஐந்து வினாக்கள் இடம்பெறும். கொடுக்கப்பட்டுள்ள பகுதியிலிருந்து ஐந்து பிழையான சொற்களைக் கண்டறிந்து அவற்றைத் திருத்திச் சரியான சொல்லை எழுதவேண்டும்.

**'இ' பிரிவு: சுயவிடைக் கருத்தறிதல் மற்றும் சொற்பொருள்**

இப்பிரிவில் ஒரு பனுவலையொட்டி (சொல்லளவு: 235-245) ஐந்து சுயவிடை வினாக்களும் ஐந்து சொற்பொருளைச் சோதிக்கும் வினாக்களும் இடம்பெறும். சுயவிடை வினாக்களுக்குரிய விடைகளைப் பகுதியின் துணைகொண்டு கண்டறிந்து சொந்த நடையில் எழுதவேண்டும்.

## <u>வினாத்தாள் 3: வாய்மொழியும் கேட்டல் கருத்தறிதலும்</u>

இவ்வினாத்தாள் வாய்மொழித் தேர்வு, கேட்டல் கருத்தறிதல் ஆகியவற்றை உள்ளடக்கியது.

<u>வாய்மொழித் தேர்வு</u>

**(10-15 நிமிடங்கள், 50 மதிப்பெண்கள், 25%)**

இத்தேர்வு பின்வரும் இரண்டு பகுதிகளை உள்ளடக்கியது:

- வாய்விட்டு வாசித்தல்
- ஒளிக்காட்சியையொட்டிய உரையாடல்

**1. வாய்விட்டு வாசித்தல்**

**(10 மதிப்பெண்கள், 5%)**

கணினித்திரையில் இடம்பெறும் ஒரு பனுவலைத் (சொல்லளவு: 100) தேர்வுக்கு அமர்பவர் வாய்விட்டு வாசிக்கவேண்டும். உச்சரிப்பு, சொல்லழுத்தம், சரளம், ஓசைநயம் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

**2. ஒளிக்காட்சியையொட்டிய உரையாடல்**

**(40 மதிப்பெண்கள், 20%)**

தேர்வுக்கு அமர்பவர் 55-60 வினாடிகளுக்குள் அமைந்திருக்கும் ஒளிக்காட்சி ஊக்கக்கூறு ஒன்றைப் பார்த்துவிட்டுத் தேர்வாளர்களுடன் அதையொட்டிய உரையாடலில் ஈடுபடவேண்டும். கேட்பவர் புரிந்துகொள்ளும் வகையில் கருத்துகளை விவரிக்கும் திறன், உரையாடலில் சரளம், மொழியின் பொருத்தப்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

**கேட்டல் கருத்தறிதல் தேர்வு**

**(ஏறத்தாழ 30 நிமிடங்கள், 20 மதிப்பெண்கள், 10%)**

செய்தி, உரையாடல், சிற்றுரை, கதை, அறிக்கை, விளம்பரம், அறிவிப்பு முதலான வகைகளில் ஆறு பனுவல்கள் இடம்பெறும். அவற்றையொட்டிப் பத்துத் தெரிவுவிடை வினாக்கள் கேட்கப்படும். ஒரே தேர்வில் இவ்வகைகள் அனைத்தும் இடம்பெறவேண்டும் என்ற அவசியமில்லை.

# 4 தேர்வு விவர அட்டவணை

**சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ் சாதாரணநிலைத் தமிழ் (1157)**

| தாள் (நேரம்) | பொருளடக்கம் | வினா வகை | வினாக்களின் எண்ணிக்கை | (மதிப்பளவு) மதிப்பெண் |
|---|---|---|---|---|
| 1<br>(2 மணி) | <u>கட்டுரை</u> | | | **(30%)<br>60** |
| | <u>'அ' பிரிவு</u><br>நடைமுறை சார்ந்த எழுத்துப்படைப்பு - மின்னஞ்சல்<br>(110 சொற்களுக்குக் குறையாமல்) | சுயவிடை | 2<br>(ஒரு வினாவிற்கு விடையளித்தல்) | (10%)<br>20 |
| | <u>'ஆ' பிரிவு</u><br>கட்டுரை<br>(200 சொற்களுக்குக் குறையாமல்)<br>வகைகள்: நிகழ்வு, விளக்கம், கதை | சுயவிடை | 3<br>(ஒரு வினாவிற்கு விடையளித்தல்) | (20%)<br>40 |
| 2<br>(1 மணி 30 நிமிடங்கள்) | <u>மொழி மரபும் பயன்பாடும் மற்றும் கருத்தறிதல்</u> | | | **(35%)<br>70** |
| | <u>'அ' பிரிவு</u><br>A1 மரபுத்தொடர்களும் இணைமொழிகளும் | கோடிட்ட இடங்களை நிறைவு செய்தல் | 5 | (5%)<br>10 |
| | A2 முன்னுணர்வுக் கருத்தறிதல் | கோடிட்ட இடங்களை நிறைவு செய்தல் | 5 | (5%)<br>10 |
| | <u>'ஆ' பிரிவு</u><br>B3 தெரிவுவிடைக் கருத்தறிதல் | தெரிவுவிடை | 5 | (5%)<br>10 |
| | B4 பிழை திருத்தம் | பிழைகளைத் திருத்தி எழுதுதல் | 5 | (5%)<br>10 |

| தாள் (நேரம்) | பொருளடக்கம் | வினா வகை | வினாக்களின் எண்ணிக்கை | (மதிப்பளவு) மதிப்பெண் |
|---|---|---|---|---|
| 2<br>(1 மணி 30 நிமிடங்கள்) | **'இ' பிரிவு**<br>C5 சுயவிடைக் கருத்தறிதல்<br>(5 சொற்பொருள் வினாக்கள் உட்பட) | சுயவிடை | 10 | (15%)<br>30 |
| 3<br>(10 -15 நிமிடங்கள்) | **வாய்மொழி** | | | **(35%)**<br>**70** |
| | வாய்விட்டு வாசித்தல் | சுயவிடை | 1 | (5%)<br>10 |
| | ஒளிக்காட்சியையொட்டிய உரையாடல் | சுயவிடை | 1 | (20%)<br>40 |
| (ஏறத்தாழ 30 நிமிடங்கள்) | **கேட்டல் கருத்தறிதல்**<br>• 6 பனுவல்கள் | தெரிவுவிடை | 10 | (10%)<br>20 |

# சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ்
# சாதாரணநிலைத் தமிழ் (1157)
# தேர்வுக்குரிய மரபுத்தொடர்கள் மற்றும் இணைமொழிகள் பட்டியல்

## மரபுத்தொடர்கள்

1. அவசரக்குடுக்கை
2. அள்ளிக் கொடுத்தல்
3. அள்ளியிறைத்தல்
4. ஆழம் பார்த்தல்
5. ஆறப்போடுதல்
6. இடங்கொடுத்தல்
7. இடித்துரைத்தல்
8. இடுப்பொடிதல்
9. இட்டுக்கட்டுதல்
10. இரண்டுபடுதல்
11. இழுக்கடித்தல்
12. இனிக்கப் பேசுதல்
13. ஈடுகட்டுதல்
14. ஈடேறுதல்
15. உச்சிகுளிர்தல்
16. உயிரைக் கொடுத்தல்
17. உரித்துவைத்தல்
18. உலைவைத்தல்
19. எடுத்தெறிதல்
20. ஒத்தூதுதல்
21. ஒருகை பார்த்தல்
22. ஒற்றைக்காலில் நிற்றல்
23. ஓடியாடிப் பார்த்தல்
24. ஓட்டம் பிடித்தல்
25. ஓட்டைக்கை
26. ஓட்டைவாய்
27. கக்கவைத்தல்
28. கண் பிதுங்குதல்
29. கண்ணை மறைத்தல்
30. கண்மூடித்தனம்
31. கதைகட்டுதல்
32. கம்பிநீட்டுதல்
33. கரைத்துக் குடித்தல்
34. கழித்துக் கட்டுதல்
35. காட்டிக் கொடுத்தல்
36. காதுகுத்துதல்
37. காலில் விழுதல்
38. கிள்ளுக்கீரை
39. குழிபறித்தல்
40. கைகழுவுதல்
41. கைகூடுதல்
42. கைகொடுத்தல்
43. கைநனைத்தல்
44. கையைக் கடித்தல்
45. கைவிரித்தல்
46. கொட்டமடித்தல்
47. சிட்டாய்ப் பறத்தல்
48. செவிசாய்த்தல்
49. சொல்லிக் காட்டுதல்
50. தட்டிக் கழித்தல்
51. தட்டிக் கேட்டல்
52. தட்டிக் கொடுத்தல்
53. தட்டிப் பறித்தல்
54. தலைமறைவு
55. தலைமுழுகுதல்
56. தலைமேற்கொள்ளுதல்
57. தலையாட்டுதல்
58. தலையிடுதல்
59. தலையெடுத்தல்
60. திக்குமுக்காடுதல்
61. நட்டாற்றில் விடுதல்
62. நெஞ்சைப் பிளத்தல்
63. நொடித்துப் போதல்
64. நோட்டம் பார்த்தல்
65. பம்பரமாகச் சுழலுதல்
66. பழிவாங்குதல்
67. பின்வாங்குதல்
68. புளிப்புத் தட்டுதல்
69. பூசி மெழுகுதல்
70. பேச்சுக் கொடுத்தல்
71. மட்டந்தட்டுதல்
72. மனக்கோட்டை
73. மனந்திறத்தல்
74. முகங்கொடுத்தல்
75. முதுகில் குத்துதல்
76. மெய்ம்மறத்தல்
77. வலைவீசுதல்
78. வாயைக் கட்டுதல்
79. வாலாட்டுதல்
80. வெட்டிப்பேச்சு

## இணைமொழிகள்

1. அடக்கவொடுக்கம்
2. அழுத்தம் திருத்தம்
3. அறக்கப் பறக்க
4. ஆடாமல் அசையாமல்
5. ஆற அமர
6. இல்லாததும் பொல்லாததும்
7. இளைத்துக் களைத்து
8. இன்பதுன்பம்
9. ஈடு இணை
10 ஈவிரக்கம்
11 ஊண் உறக்கம்
12 ஊரும் பேரும்
13 எதிரும் புதிரும்
14 ஏட்டிக்குப் போட்டி
15 ஏழை எளியவர்
16 ஏற்றதாழ்வு
17 ஏனோ தானோ
18 ஒட்டி உலர்ந்து
19 ஓட்டை உடைசல்
20 ஓய்வு ஒழிச்சல்
21 கங்கு கரை
22 கண்டதையும் கேட்டதையும்
23 கனவோ நனவோ
24 குறுக்கும் நெடுக்கும்
25. கூச்சல் குழப்பம்
26. கையுங்களவும்
27. சட்டதிட்டம்
28. சாடை மாடை
29. சீராட்டிப் பாராட்டி
30. சீரும் சிறப்பும்
31. சொத்து சுகம்
32. தானதர்மம்
33. நடை உடை
34. நெளிவு சுளிவு
35. பட்டம் பதவி
36. பயிர் பச்சை
37. பழக்கவழக்கம்
38. பேரும் புகழும்
39. போரும் பூசலும்
40. முட்டி மோதி
41. மேடு பள்ளம்
42. மேளதாளம்
43. வம்பு தும்பு
44. வரவு செலவு
45. வற்றி வறண்டு
46. வாடி வதங்கி
47. வாட்டசாட்டம்
48. விருப்பு வெறுப்பு

## சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ்
## சாதாரணநிலைத் தமிழ் (1157)
## பிழை திருத்தம்
## தேர்வில் சோதிக்கப்படவிருக்கும் இலக்கணக்கூறுகள்

| | |
|---|---|
| **எழுத்து வகைகள்** | • குறில், நெடில்<br>• ஏகார, ஓகார எழுத்துகள் கொண்ட சொற்கள்<br>• இனவெழுத்து |
| **சொல் வகைகள்** | • வினாப்பெயர்<br>• சுட்டுப்பெயர், பதிலிடுபெயர்<br>• தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று |
| **தொடர் அமைப்பு** | • இயைபு - எழுவாய், பயனிலை முதற்கொண்டு திணை, பால், எண் இடம், காலம் முதலான ஏனைய இலக்கணக்கூறுகளையும் உள்ளடக்கும்<br>• வேற்றுமை உருபுகள் (ஐ, ஆல், உடன், ஓடு, கு, அது, உடைய, இல், இன், இடம், இலிருந்து, இடமிருந்து)<br>• பெயரெச்சம், எதிர்மறைப் பெயரெச்சம், வினையெச்சம், எதிர்மறை வினையெச்சம்<br>• குறிப்புப் பெயரெச்சம், குறிப்பு வினையெச்சம்<br>• வினையாலணையும் பெயர்<br>• இணைப்புச் சொல் (உம், ஆனால், அதனால், அப்போது, எனவே, ஆகவே, ஆகையால், ஆதலால், எனினும், இருப்பினும், இருந்தபோதிலும், மேலும்)<br>• உடன்பாட்டு வினைமுற்று, எதிர்மறை வினைமுற்று<br>• செய்வினை, செயப்பாட்டுவினை<br>• தன்வினை, பிறவினை |
| **சொல் பயன்பாடு** | • ஒலி வேறுபாட்டுச் சொற்கள்<br>• ஒரு, ஓர்<br>• சில, சிலர், பல, பலர் |

*இந்த இலக்கணக்கூறுகளின் பட்டியல் 2021-ஆம் ஆண்டு அமலாக்கம் செய்யப்பட்ட தமிழ்மொழிப் பாடத்திட்டத்தை அடியொற்றி உருவாக்கப்பட்டுள்ளது.

## சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ் சாதாரணநிலைத் தேர்வு
## தமிழ்

## நடைமுறை சார்ந்த எழுத்துப் படைப்புக்குரிய மதிப்பீட்டுத் திட்டம்
## (20 மதிப்பெண்கள்)

பொருள் (10 மதிப்பெண்கள்)

| வகை | வகை 1 | வகை 2 | வகை 3 | வகை 4 |
|---|---|---|---|---|
| மதிப்பெண்கள் | **9-10** | **6-8** | **3-5** | **1-2** |
| கருத்துப் பொருத்தம் | ▪ முழுதும் பொருத்தமான கருத்துகள் | ▪ பெரும்பாலும் பொருத்தமான கருத்துகள் | ▪ ஓரளவு பொருத்தமான கருத்துகள் | ▪ மிகச் சில பொருத்தமான கருத்துகள் |
| கருத்து வளர்ச்சி | • மிகத் தெளிவான கருத்து வளர்ச்சி | ▪ தெளிவான கருத்து வளர்ச்சி | ▪ பல இடங்களில் கருத்து வளர்ச்சி இல்லாதிருத்தல் | ▪ கருத்துகள் தெளிவற்று இருத்தல்; கூறியது கூறல் இடம்பெற்றிருத்தல் |

## மொழியும் அமைப்புமுறையும் (10 மதிப்பெண்கள்)

| வகை | வகை 1 | வகை 2 | வகை 3 | வகை 4 |
|---|---|---|---|---|
| மதிப்பெண்கள் | **9-10**<br>(மிகச் சிறந்த மொழித்திறன்) | **6-8**<br>(சிறந்த மொழித்திறன்) | **3-5**<br>(சராசரி அல்லது அதற்கும் கீழ்நிலையிலான மொழித்திறன்) | **1-2**<br>(மொழித்திறன் மோசமாக இருத்தல்) |
| இலக்கணமும் மொழியமைப்பும் | ▪ எழுத்து, சொல், தொடரமைப்பு, சொல்லாட்சி, நிறுத்தற்குறி ஆகியவற்றில் பெரும் பிழைகள் இன்மை; மிகச் சில இடறல்கள் அல்லது சிறு பிழைகள் | ▪ எழுத்து, சொல், தொடரமைப்பு, சொல்லாட்சி, நிறுத்தற்குறி ஆகியவற்றில் சில பெரும் பிழைகளும் சிறு பிழைகளும் | ▪ எழுத்து, சொல், தொடரமைப்பு, சொல்லாட்சி, நிறுத்தற்குறி ஆகியவற்றில் பல பெரும் பிழைகளும் சிறு பிழைகளும் | ▪ எழுத்து, சொல், தொடரமைப்பு, சொல்லாட்சி, நிறுத்தற்குறி ஆகியவற்றில் பெரும் பிழைகளும் சிறு பிழைகளும் மலிந்திருத்தல் |
| கருத்து வெளிப்பாடு | ▪ கருத்துகளைத் தெளிவாக விளக்கப் பொருத்தமான, பலதரப்பட்ட சொல்லாட்சியையும் வாக்கிய அமைப்புகளையும் பயன்படுத்தியிருத்தல் | ▪ கருத்துகளை விளக்கப் பொருத்தமான சொல்லாட்சியையும் வாக்கிய அமைப்புகளையும் பயன்படுத்தியிருத்தல் | ▪ எளிய சொல்லாட்சியையும் வாக்கிய அமைப்புகளையும் பயன்படுத்தியிருத்தல்; பல இடங்களில் கருத்துகள் தெளிவற்று இருத்தல் | ▪ மொழிப் பிழைகளினால் கருத்துகளைப் புரிந்துகொள்வதில் இடர்ப்பாடு இருத்தல் |
| கருத்துத் தொடர்ச்சி | ▪ பத்தியிலும் பத்திகளுக்கிடையிலும் மிக நிரல்பட அமைந்த கருத்துத் தொடர்ச்சி | ▪ பத்தியிலும் பத்திகளுக்கிடையிலும் பெரும்பாலும் நிரல்பட அமைந்த கருத்துத் தொடர்ச்சி | ▪ பத்தியளவில் ஓரளவு நிரல்பட அமைந்த கருத்துத் தொடர்ச்சி | ▪ கருத்துத் தொடர்ச்சி இல்லாதிருத்தல் |

## சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ் சாதாரணநிலைத் தேர்வு
## தமிழ்

## கட்டுரைக்குரிய மதிப்பீட்டுத் திட்டம்
## (40 மதிப்பெண்கள்)

பொருள் (20 மதிப்பெண்கள்)

| வகை | வகை 1 | வகை 2 | வகை 3 | வகை 4 | வகை 5 |
|---|---|---|---|---|---|
| மதிப்பெண்கள் | **17-20** | **13-16** | **9-12** | **5-8** | **1-4** |
| **கருத்துப் பொருத்தம்** | ▪ முழுதும் பொருத்தமான கருத்துகள் | ▪ பெரும்பாலும் பொருத்தமான கருத்துகள் | ▪ போதிய அளவு பொருத்தமான கருத்துகள் | ▪ ஓரளவு பொருத்தமான கருத்துகள் | ▪ மிகச் சில பொருத்தமான கருத்துகள் |
| **கருத்து வளர்ச்சி** | ▪ மிகத் தெளிவான கருத்து வளர்ச்சி | ▪ தெளிவான கருத்து வளர்ச்சி | ▪ ஓரளவு தெளிவான கருத்து வளர்ச்சி | ▪ பல இடங்களில் கருத்து வளர்ச்சி இல்லாதிருத்தல் | ▪ கருத்துகள் தெளிவற்று இருத்தல்; கூறியது கூறல் இடம்பெற்றிருத்தல் |

## மொழியும் அமைப்புமுறையும் (20 மதிப்பெண்கள்)

| வகை | வகை 1 | வகை 2 | வகை 3 | வகை 4 | வகை 5 |
|---|---|---|---|---|---|
| மதிப்பெண்கள் | **17-20** (மிகச் சிறந்த மொழித்திறன்) | **13-16** (சிறந்த மொழித்திறன்) | **9-12** (சராசரி மொழித்திறன்) | **5-8** (சராசரிக்கும் கீழ்நிலையிலான மொழித்திறன்) | **1-4** (மொழித்திறன் மோசமாக இருத்தல்) |
| **இலக்கணமும் மொழியமைப்பும்** | ▪ எழுத்து, சொல், தொடரமைப்பு, சொல்லாட்சி, நிறுத்தற்குறி ஆகியவற்றில் பெரும் பிழைகள் இன்மை; மிகச் சில இடறல்கள் அல்லது சிறு பிழைகள் | ▪ எழுத்து, சொல், தொடரமைப்பு, சொல்லாட்சி, நிறுத்தற்குறி ஆகியவற்றில் பெரும் பிழைகளைவிடச் சிறு பிழைகள் அதிகம் இருத்தல் | ▪ எழுத்து, சொல், தொடரமைப்பு, சொல்லாட்சி, நிறுத்தற்குறி ஆகியவற்றில் சிறு பிழைகளைவிடப் பெரும் பிழைகள் அதிகம் இருத்தல் | ▪ எழுத்து, சொல், தொடரமைப்பு, சொல்லாட்சி, நிறுத்தற்குறி ஆகியவற்றில் பெரும் பிழைகளும் சிறு பிழைகளும் அதிகம் இருத்தல் | ▪ எழுத்து, சொல், தொடரமைப்பு, சொல்லாட்சி, நிறுத்தற்குறி ஆகியவற்றில் பெரும் பிழைகளும் சிறு பிழைகளும் மலிந்திருத்தல் |
| **கருத்து வெளிப்பாடு** | ▪ கருத்துகளைத் தெளிவாக விளக்கப் பொருத்தமான, பலவகையான சொல்லாட்சியையும் வாக்கிய அமைப்புகளையும் பயன்படுத்தியிருத்தல் | ▪ கருத்துகளை விளக்கப் பொருத்தமான சொல்லாட்சியையும் வாக்கிய அமைப்புகளையும் பயன்படுத்தியிருத்தல் | ▪ கருத்துகளை விளக்க ஓரளவு பொருத்தமான சொல்லாட்சியையும் எளிய வாக்கிய அமைப்புகளையும் பயன்படுத்தியிருத்தல் | ▪ எளிய சொல்லாட்சியையும் வாக்கிய அமைப்புகளையும் பயன்படுத்தியிருத்தல்; பல இடங்களில் கருத்துகள் தெளிவற்று இருத்தல் | ▪ மொழிப் பிழைகளினால் கருத்துகளைப் புரிந்துகொள்வதில் இடர்ப்பாடு இருத்தல் |
| **கருத்துத் தொடர்ச்சி** | ▪ பத்தியிலும் பத்திகளுக்கு இடையிலும் மிக நிரல்பட அமைந்த கருத்துத் தொடர்ச்சி | ▪ பத்தியிலும் பத்திகளுக்கு இடையிலும் பெரும்பாலும் நிரல்பட அமைந்த கருத்துத் தொடர்ச்சி | ▪ பத்தியிலும் பத்திகளுக்கு இடையிலும் ஓரளவு நிரல்பட அமைந்த கருத்துத் தொடர்ச்சி | ▪ பத்தியளவில் மட்டும் ஓரளவு அமைந்த கருத்துத் தொடர்ச்சி | ▪ கருத்துத் தொடர்ச்சி இல்லாதிருத்தல் |

## சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ் சாதாரணநிலைத் தேர்வு
## தமிழ்

## வாய்மொழித் தேர்வுக்குரிய மதிப்பீட்டுத் திட்டம்
## (50 மதிப்பெண்கள்)

வாய்விட்டு வாசித்தல் (10 மதிப்பெண்கள்)

| வகை | வகை 1 | வகை 2 | வகை 3 | வகை 4 |
|---|---|---|---|---|
| மதிப்பெண்கள் | 9-10 | 6-8 | 3-5 | 1-2 |
| **உச்சரிப்பும் சொல்லழுத்தமும் சரளமும் ஓசைநயமும்**<br>(10 மதிப்பெண்கள்) | • தெளிவான உச்சரிப்பு<br><br>• தெளிவான சொல்லழுத்தம்<br><br>• சீரான சரளம்<br><br>• பொருத்தமான குரல் ஏற்ற இறக்கம் | • சில பிழைகளை மட்டும் கொண்ட உச்சரிப்பு<br><br>• பெரும்பாலும் தெளிவான சொல்லழுத்தம்<br><br>• பெரும்பாலும் சீரான சரளம்<br><br>• பெரும்பாலும் பொருத்தமான குரல் ஏற்ற இறக்கம் | • எளிதில் அறியக் கூடிய பல பிழைகளைக் கொண்ட உச்சரிப்பு<br><br>• ஓரளவு தெளிவான சொல்லழுத்தம்<br><br>• ஓரளவு சரளம்<br><br>• ஓரளவு பொருத்தமான குரல் ஏற்ற இறக்கம் | • தெளிவில்லாத உச்சரிப்பு<br><br>• தெளிவில்லாத சொல்லழுத்தம்<br><br>• சரளமற்ற வாசிப்பு<br><br>• கிட்டத்தட்ட தனித்தனிச் சொல்லாக வாசித்தல் |

**ஒளிக்காட்சியையொட்டிய உரையாடல் (40 மதிப்பெண்கள்)**

| வகை | வகை 1 | வகை 2 | வகை 3 | வகை 4 |
|---|---|---|---|---|
| மதிப்பெண் பரப்பெல்லை | 16 - 20 | 11 - 15 | 6 - 10 | 1 - 5 |
| **கருத்துரைத்தலும் கருத்து வளர்ச்சியும்** (20 மதிப்பெண்கள்) | • தலைப்புக்கு ஏற்ற பொருத்தமான கருத்துகளைக் கூறுதல்<br>• கருத்து வளர்ச்சி தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் இருத்தல்<br>• பொருத்தமான எடுத்துக்காட்டுகளுடன் கருத்துகளை விரிவாகக் கூறுதல்<br>• உரையாடலைத் தொடர்ச்சியாக நிகழ்த்துதல் | • பெரும்பாலும் தலைப்புக்கு ஏற்ற பொருத்தமான கருத்துகளைக் கூறுதல்<br>• கருத்து வளர்ச்சி பெரும்பாலும் தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் இருத்தல்<br>• பெரும்பாலான கருத்துகளைப் பொருத்தமான எடுத்துக்காட்டுகளுடன் விரிவாகக் கூறுதல்<br>• பெரும்பாலான வேளைகளில் உரையாடலைத் தொடர்ச்சியாக நிகழ்த்துதல் | • ஓரளவு தலைப்புக்கு ஏற்ற பொருத்தமான கருத்துகளைக் கூறுதல்<br>• கருத்து வளர்ச்சி ஓரளவு தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் இருத்தல்<br>• சில கருத்துகளைப் பொருத்தமான எடுத்துக்காட்டுகளுடன் விரிவாகக் கூறுதல்<br>• சில வேளைகளில் மட்டுமே உரையாடலைத் தொடர்ச்சியாக நிகழ்த்துதல் | • மிகக் குறைந்த கருத்துகளைக் கூறுதல்<br>• கருத்து வளர்ச்சி குறைந்த அளவில் இருத்தல்<br>• பெரும்பாலான கருத்துகளை விரிவாகக் கூற இயலாதிருத்தல்<br>• உரையாடலைத் தொடர்ச்சியாக நிகழ்த்த இயலாதிருத்தல் |

| வகை | வகை 1 | வகை 2 | வகை 3 | வகை 4 |
|---|---|---|---|---|
| மதிப்பெண் பரப்பெல்லை | 16 - 20 | 11 - 15 | 6 - 10 | 1 - 5 |
| **சரளமும் மொழிப் பயன்பாடும்** (20 மதிப்பெண்கள்) | • சரளமாக உரையாடுதல்<br>• பொருத்தமான சொல்லாட்சியையும் தொடர்களையும் பயன்படுத்துதல் | • ஓரளவு சரளமாக உரையாடுதல்<br>• ஓரளவு பொருத்தமான சொல்லாட்சியையும் எளிய தொடர்களையும் பயன்படுத்துதல் | • தயக்கத்துடன் உரையாடுதல்<br>• சிறிது பொருத்தமற்ற சொல்லாட்சியையும் எளிய தொடர்களையும் பயன்படுத்துதல் | • அதிகத் தயக்கத்துடன் உரையாடுதல்<br>• பெரும்பாலும் பொருத்தமற்ற சொல்லாட்சியையும் எளிய தொடர்களையும் பயன்படுத்துதல் |